Min. Ann 6(i)

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – வன்கொடுமை தடுப்பு – 2015–16ஆம் ஆண்டிற்கான அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்களின் புதிய அறிவிப்புகள் - குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் 1955 மற்றும் ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் 1989 தொடர்பான செயலாக்கத்தை கண்காணிக்க மென்பொருள் உருவாக்க நிர்வாக ஒப்பளிப்பு - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கொடு.தடு2)துறை**

அரசாணை (நிலை) எண்:9

**நாள்:. 08.01.2016**
**மன்மத ஆண்டு, மார்கழி 23**
**திருவள்ளுவராண்டு 2046**

படிக்கப்பட்டது:

ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடிதம் ந.க.எண்.H4/ 24216/15, நாள் 13.10.2015.

---

ஆணை:

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 2015–16–ஆம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் 16.09.2015 அன்று நடைபெற்ற மானியக் கோரிக்கை விவாதத்தின்போது கீழ்க்காணும் அறிவிப்பை வெளியிட்டார்கள்:–

> "தீண்டாமை மற்றும் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1955 குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் 1989 மற்றும் கொத்தடிமை முறை ஒழிப்புச் சட்டம் 1976 இவைகளின் செயலாக்கத்தை கண்காணிக்கவும், திட்ட அமலாக்கத்தை இணையம் மூலம் ஒருங்கிணைக்கவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்பட்டி ஒருங்கிணைந்த இரண்டு மென்பொருள்கள் ரூ.8 இலட்சம் செலவில் உருவாக்கி செயல்படுத்தப்படும்".

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் ஆதிதிராவிடர் நல இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு எதிராக நிகழும் தீண்டாமை மற்றும் வன்கொடுமைகளைத் தடுக்க குடியுரிமைப் பாதுகாப்பு சட்டம் 1955 மற்றும் ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் 1989 மைய அரசால் உருவாக்கப்பட்டு மாநில அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும், இச்சட்டங்களின் கீழ் வழக்குகளை பதிவு செய்தல், விசாரணை செய்தல், வழக்குத் தொடுத்தல் ஆகியவற்றை மேற்பார்வை செய்வதற்கு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் பாதுகாப்பிற்காக மாவட்ட அளவிலான விழிப்புணர்வு மற்றும் மேற்பார்வைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்றும், மாவட்ட அளவிலான குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி மேற்கூறிய விதிகளை நடைமுறைப்படுத்துவது பற்றியும், பாதிக்கப்பட்டவர்களுக்கு தீருதவி மற்றும் மறுவாழ்வு அளிப்பது குறித்தும், பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் நிலை பற்றிய ஆய்வும், இத்திட்டத்தை கண்காணித்து விரைவாக செயல்படுத்தவும், வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இணையதளம் மூலம் நிதி உதவிகளை பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்திடவும், காவல்துறை, நீதி மன்றம், கோட்டாட்சியர்கள், மாவட்ட ஆட்சியர்கள், அரசு ஆகியவற்றுடன் தகவல் தொடர்பு, திட்ட அமலாக்க ஒருங்கிணைப்பு புகார்களை இணைய தளம் மூலம் இணைத்து வன்கொடுமை தொடர்பான விவரங்களை நேரடி இணையதளம் மூலம் இணைத்திடவும் ஒருங்கிணைந்த மென்பொருளை வடிவமைத்து செயல்படுத்தினால் இச்சட்டத்தை சிறப்பாக செயல்படுத்திடலாம் என ஆதிதிராவிடர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார். எனவே 2015-2016-ஆம் ஆண்டுக்கான அரசின் புதிய அறிவிப்புகளில் உள்ள அறிவிப்பிற்கேற்ப குடியுரிமை பாதுகாப்புச் சட்டம் 1955 மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (வன்கொடுமை தடுப்பு) சட்டம் 1989, குடியுரிமை பாதுகாப்புச் சட்டம் 1989-இன் செயலாக்கத்திற்காக கணினி வழி ஒருங்கிணைந்த மென்பொருளை (software) உருவாக்கிட 2015-2016-ஆம் ஆண்டுக்கான புதிய அறிவிப்புகளின் கீழ் ஒரு முறை செலவினமாக (தொடராச் செலவினம்) 2015-2016-ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டில் ரூ.5/- இலட்சத்தினை புதிய கணக்குத் தலைப்பின் கீழ் ஒப்பளிப்பு செய்து தருமாறு அரசைக் கோரியுள்ளார். இம்மென்பொருளை National Informatic Centre (NIC) அல்லது வெளி முகமை மூலம் உருவாக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

3. மேலே பத்தி இரண்டில் உள்ள ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு கவனமுடன் ஆய்வு செய்தது. ஆதிதிராவிடர்களுக்கான வன்கொடுமைகள் தொடர்பான விவரங்களை இணைத்திடவும், குடியுரிமைச் சட்டம் 1955, ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் 1989-இன் செயலாக்கத்தை கண்காணிக்கவும் ஏதுவாக ஒரு மென்பொருளை (Software) உருவாக்க ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்களுக்கு அதிகாரமளித்தும், அம்மென்பொருளை ரூ.5 இலட்சம் (ஐந்து இலட்சம் மட்டும்) செலவில் உருவாக்க நிர்வாக ஒப்புதல் அளித்தும் அரசு ஆணையிடுகிறது. புதிய மென்பொருள் (Software) உருவாக்குவது குறித்து தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம், 1998 மற்றும் விதிகள் 2000-இன் படி ஒப்பந்த நடைமுறைகள் பின்பற்றப்பட்டு செலவினம் நிர்ணயிக்கப்பட்ட பின்னர், இத்திட்டத்திற்கான நிதி ஒப்பளிப்பு வழங்கப்படும் என்றும் ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

4. மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 ஆதிதிராவிடர் நலன் – 800 ஏனைய செலவு – VI மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – UL 1955 ஆம் ஆண்டு மக்கள் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தை செயற்படுத்தும் நிருவாக அமைப்பு – (ததொகு 2225 01 800 UL )

5. இவ்வரசாணை நிதித்துறையில் அசாகு எண்.96 ஆதி(ம)பந/2016–1, நாள்: 8.1.2016–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி//

ப.அண்ணாமலை
அரசு செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5.
கூடுதல் காவல் துறை இயக்குநர்
சமூக நீதி மற்றும் மனித உரிமைகள், சென்னை–4.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், (சென்னை நீங்கலாக)
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை 6/18/35
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை–8
நகல்: நிதி(வ.செ.பொ.II/ஆதி(ம)பந)துறை, சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(அநமு–1 / ஆதிந–5) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

எஸ்-உமா கேஸ்வரி
11.1.16
பிரிவு அலுவலர்.